

Vol.23 | No. 9 | September 2019

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

14 AUGUST 2019
MEETING OF DIOCESAN
HEALTH ASSOCIATION
(DHA) KALLUVILAI












3rd AUGUST 2019
VIANNEY DAY CELEBRATION
MUKKUTTUKAL










4th AUGUST 2019
ST.ALPHONSA'S ACADEMY
AWARD DAY NAGERCOIL







11nth AUGUST 2019
FEAST DAY HOLY QURBANA
VANCHINAGER

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 23 No :09 SEPTEMBER 2019



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் | 14 |
| ஆயர் திருமுகம் | 17 |
| மறைக்கல்வி | 21 |
| இளையோர் இயக்கம் | 24 |
| மிஷன் லீக் | 26 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 27 |
| இல்வாழ்வு இயக்கம் | 29 |
| வின்சென்ட் தே பவுல் | 30 |
| சமூக சேவை சங்கம் | 32 |
| கல்விப்பணி | 35 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 36 |
| மறைவட்டச் செய்திகள் | 37 |
| Personal Details of Jubilarians | 41 |
| Birthdays & Feastdays | 44 |
| Bishop's Engagements | 45 |


*Editorial Board*

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Jesin**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**REF. NO. PRIESTS/GR/97/2019 31 JULY 2019**

**DEARS,**

**GREETINGS FROM BISHOP'S HOUSE, THUCKALAY!**

Pope Francis on 2 April 2019 published a document dedicated to the youth, bringing full-circle a process of consultation that began last year when the Vatican reached out to young people around the world on how to involve them in the activities of the Church.

Named ChristusVivit, the document is 180 pages long and it takes into consideration not only what was said during the Synod of Bishops but also what the youth said during a pre-synod gathering that took place in Rome several months earlier. Though some 200 people were in attendance, thousands more participated through Facebook. TNBC has translated this document into Tamil.

A brief summary of the document is in order although we have spent much time studying it in different groups. The exhortation is divided into nine chapters and is addressed in a particular way to young Catholics.

**Chapter One: What does the Word of God have to say about young people?**The Holy Father begins by recalling well known youthful characters in the Old Testament like Joseph who, even though being the youngest from among the sons of Jacob, becomes favoured by God. Gideon is presented as a young person who speaks frankly to God. In this way, he expresses his youthfulness. Other important characters in the Old Testament are Samuel, Saul, David, Solomon, Ruth and the Jewish servant in the house of Namaan the Syrian. All these characters received their mission from God whilst in their youthful stage of life. In them, we see a God who takes a particular interest in issues of young people.

The New Testament continues the theme of youthfulness in a number of narratives.

Among these can be recalled the famous parable of the younger son in Luke 15. He risks his life and when he realizes that he has done wrong is not afraid to change course and go back home. This character is contrasted with the older son who remains at home with a cold heart, unwilling to forgive and rejoice with the Father and his household. In his preaching, Jesus continually exalts being young. He speaks of the greatest among his disciples becoming like the youngest. Paul continues this thread when he exhorts Timothy that his youth be despised by no one (1 Tim 4:12).

The fact that young people are mentioned positively in the exhortation does not mean that elders should be disrespected. On the contrary, an exhortation to respect them is firmly upheld. "In the same way, younger people, be subject to the elders" (1 Pet 5:5). To be young is to be willing to change and at the same time to be wise like the young women who awaited the arrival of the bridegroom. Every young person should thus be ready to hear the words of Jesus as were uttered to the young man: "Young man, I say to you arise" (Luke 7:14).

**Chapter two: Jesus, ever young** The Holy Father speaks of a Jesus who is young and in this way sanctifying being young. As a child, he appears as a refugee in Egypt and later on is repatriated to Nazareth. He is seen among the crowds in the Jordan to be baptized and hears the words, "You are my beloved child". Such words should ring in the ears of all young people today.

We also see Jesus being obedient to his parents after the episode of having remained behind in the Temple. Luke emphasizes that Jesus grew in wisdom, age and grace before God and man. As a sign of his obedience, we learn that he learned his father's trade as a carpenter (Mk. 6:3). He was not a self-absorbed youth. The episode of him having been lost gives us an indication that he freely related to the crowds and his own relations. It was for this reason that his parents started off by looking for him from among their relations thinking that he was journeying with them. The use of the word synodia is thus important in observing the young Jesus.

Jesus' youthful days teach us, especially young people, that it is important to have a correct relationship with the father and the

importance of family. This requires openness to the Holy Spirit which in turn allows a young person to recognize his mission and personal vocation. Like Jesus, young people need to show compassion for the poor and the sick.

The message of a youthful Church is not only for young people but for the whole Church. The Church must always be open to renewal. She is young when she is open to God's word, the Eucharist, constantly returning to her source which is Christ himself and being attentive to the signs of the times.

In this endeavour, the Church has in the first place Mary as a model of being young. Just like a young person she was not afraid to ask probing questions when she received the angel (Luke 1:34) and finally embracing her mission (Luke 1:38). Young people can learn from Mary who was not fearful. She embraced her mission totally without being overwhelmed by the sufferings of her son. She became an influencer through thick and thin.

The Church is littered with many models of sanctity who were young. Among these, we may recall Blessed Isidore Bakanja of Congo who was tortured for proposing Christianity to other young people and prior to his death forgave his executioner.

**Chapter three: You are the 'now' of God.** The Holy Father emphasizes that young people are not simply the future of the Church. On the contrary, they are the present and should thus assume responsibilities proper to them in the Church and society in general. Being the 'now' of God therefore also requires that adults listen to young people and avoid giving pre-packaged answers to them. Adults need to be aware that young people themselves are bearing seeds of divine life within them.

The 'now' of young people shows that many young people are exposed to suffering and manipulation by various ideologies. These ideologies encourage young people to ridicule others on the basis of sexuality, race and otherwise. At times young people live in constant marginalization due to their religious affiliation, economic standing and or even ethnicity. The Church cannot remain indifferent to the problems of young people. As a mother, she must weep in the face of all these problems. Her weeping is a sign of her mercy

and compassion.

The Holy Father goes on to emphasize three important matters currently affecting young people:

- The digital environment, which has both bright and dark spots. On the positive side, the digital environment allows young people to engage politically and thus engage actively in public affairs. Negatively though, the digital environment may lead to loneliness, manipulation, fake news and violence with the accompanying addictions and loss of contact with concrete reality.
- Migration, which remains the Church's main concern especially on those fleeing war, violence, persecution, hunger, natural disasters and poverty. It may lead to a fragmentation of families. For many migrants the Church remains a point of reference. On the positive side, migration can be about the encounter and the meeting of cultures which should be appreciated. In this way, it becomes a source of enrichment for both migrants and the receiving societies.
- Abuse, especially sexual abuse, which has even been perpetrated by some leaders in the Church. The Holy Father condemns this evil and in the same breath applauds the courage of all those who have come out and spoken out openly against it.

As he concludes this chapter, the Holy Father invites young people to renew themselves with the hope that only Jesus gives. At the same time, he invites young people to stick together so that they can face their challenges as a united force.

**Chapter four: A great message for all young people.**The Holy Father speaks of the demands of faith that young people need to know:

- God loves you: This explains the worth, significance and importance of young people before God.
- Christ saves you: He saves all young people out of love and no one is for sale. No ideology may save a young person.
- Christ is alive: He is not a distant figure of two thousand years ago but remains an influential and active presence today in the lives of young people.
- The Spirit gives life: All young people have to open them-

selves up to the Holy Spirit who is the only one that is able to keep alive the hope of salvation.

**Chapter five: Path of Youth**.The Holy Father embarks on an analysis of what it means to live the years of youth in the light of the gospel. Youth is a time of dreams and decisions whence the young are called to move forward without cutting themselves off from their roots. Of course, temptations like complaining, giving up and anxiety are sure to come. For this reason, young people should be able to exercise patience and not expect instant results. They should not be afraid to try something new even not be afraid to make mistakes.

In living out their youth, young people are encouraged to enjoy the small everyday blessings and having a constant friend in Jesus. The key to maintaining this friendship is prayer. This friendship allows for growth in maturity as the young person remains cemented in the Lord, "being online" "being connected."

Growing older requires cherishing and preserving the most precious things about youth but also having to purify those things that are not good and receiving new gifts from God so that one can develop the things that really matter. This requires that the young person grow up to be truly himself. A strong warning is stated here. "Do not be a photocopy of somebody else". Be more of yourself, becoming what the Lord wished to dream and create.

The Holy Father then proceeds to give three ways as to how this growth to maturity may be achieved:

- Paths of fraternity, which find expression in the hidden beauty in others, their dignity as creatures of God and children of the Father. This fraternity is expressed beautifully in the African proverb which says "If you want to go fast, go alone. If you want to go far, go together".
- To be young and committed allows one to go beyond small groups. This may find expression in assisting the elderly, the sick, poor neighbourhoods, the homeless and the needy. It is important that young people see themselves as protagonists for change.
- To be courageous missionaries who are called to be witnesses of the gospel wherever they find themselves and be aware that

there are no borders to missionary work. The Lord seeks all and all should participate in missionary work.

**Chapter six: Young people in the roots.** This chapter seeks to encourage young people not to allow themselves to be uprooted from their culture and origins. Such an uprooting unfortunately, lends a young person to the danger of ideologies which encourage the young person to ignore history, rejecting the experience of his elders and look down on the past. The Holy Father calls these ideologies masters of manipulation who despise all that is not young. It finds expression in the so called so-called cult of youth which sees growing old as a problem. On occasion this cult also tends to homogenize young people, blurring out what is distinctive about their origins. The Holy Father makes a clear call that the young should reject this cult of youth as it promises a shallow life.

Having condemned the cult of youth, the Holy Father proceeds to emphasize the importance of a relationship with the elderly. “Helping young people to discover the living richness of the past, to treasure its memory and make use of it for their choices and opportunities is a genuine act of love towards them”. Even Scripture emphasizes this harmonious relationship as seen in the fourth commandment and wisdom literature. Elders, therefore, can assist or teach the young in the following ways:

- A life without love is an arid life.
- Anxiety about the future can be overcome.
- There is more joy in giving than receiving.
- Love is not only shown in words, but also in action.

As a parting shot in this chapter, the Holy Father exhorts young people as follows: “Steer clear of young people who think that adults represent a meaningless past and those adults who always think that they know how young people should act. Together let us seek a better world, assisted by the Holy Spirit.”

**Chapter seven: Youth Ministry.** In advocating for an improved youth ministry the Holy Father encourages a synodal approach. Of course, it is important to make use of methods that

have worked in the past be they labelled conservative or liberal, traditional or progressive. The important thing is to promote effective communication of the joy of the gospel. Such a synodal approach thus encourages a form of co-responsibility in such a way that no one is excluded. The unity of the Church should not be seen as monolithic as such but a network of varied gifts.

Two important approaches need to stand out in youth ministry. The first is outreach and the second is growth. Outreach refers to reaching out to those who are outside the Church through various means like social media, songs, video, songs and other means which are able to touch the hearts of young people. Growth refers to those already inside the Church who should experience all the more the love in the Christian life as they deepen too on Christian doctrine and morality. Christian doctrine should focus on the development of the kerygma with morality focusing on the importance of fraternal love.

Institutions play an important role in Youth Ministry. These should be welcoming and be like a real home and family for young people. They should be placed where young people can come and go. The preservation and or establishment of oratories and youth centres should thus be promoted. Also, educational institutions like schools and universities should be maintained and these should not only give academic formation but also cultivate the kerygma and be engaged in cultural formation.  Whilst these institutions should engage in various activities like sports and art, nevertheless, the Word of the Lord, the Eucharist, Reconciliation and the importance of the lives of the saints should never be forgotten.

Youth Ministry should not be limited to what we are familiar with but should also go to the popular spaces where young people already are. This forms part of the outreach posture and it is in such spaces that the Church can be seen as keeping open doors. These popular spaces will allow for the welcoming of those with a different vision of life and those belonging to other religions or even out of religion. The important thing to keep before our eyes is that all young people are in God's heart and thus in the heart of the Church.

Participation in popular piety like pilgrimages forms part of youth ministry. In all this, the importance of accompaniment by adults can never be overstated. Among the qualities of such adults, the following deserve special mention: A faithful Christian, seeking holiness, confident, not judging, listener, self-aware, recognizing own limits, acknowledging own humanity, makes mistakes and believing in young people.

**Chapter eight: Vocation.** In this chapter, the Holy Father underlines the fact that God has a wonderful plan for us all and the importance of the call to holiness. God has called us to a friendship and Jesus wants to be a friend of every young person. Every vocation requires one to be there for others and engaging in missionary service. Being there for others may take two forms namely love/ family and work.

Many young people feel intensely the call to love with the view of forming a family. The sacrament of matrimony envelops this love in the grace of God. God has created us as sexual beings and sex is a beautiful gift from the Lord. Its purpose is to love and generate life. Indeed, for many young people, the family continues to be a point of reference in spite of problems of divorce and the disintegration of families. When such happens it has been observed that on occasion grandparents have played a decisive and positive role. They should be treasured and appreciated as they have done a lot in holding families together, being helpful and crucial in affection and religious education.

Work allows young adults to meet their practical needs, to seek meaning and fulfilment of their dreams and visions. Yet, it is also in the area of work that some young people can experience exclusion and marginalization. This is certainly true of youth employment affecting many countries today. In spite of the pervasive unemployment, the Holy Father exhorts young people not to give up on their dreams and never to accept defeat.

Beyond family and work, the Holy Father goes on to indicate that some people might feel called to the priesthood and consecrated life. It is important that those who feel called to these states of life do so with confidence in the Lord.

**Chapter nine: Discernment.** Discernment is fundamental in discovering one's vocation in life without which we can easily become prey to passing trends. It has to do with seeking a glimpse of that unique and mysterious plan that God has for each of us, the meaning of one's life before God who knows and loves every human being. Young people should make use of the many priests, religious, lay professionals and other qualified young people in the process of discernment.

In conclusion, the Holy Father invites the young peoples of the world to keep running, attracted by the face of Christ who loves us so much, whom we adore in the Holy Eucharist and acknowledge in the flesh of our suffering brothers and sisters.

Our Eparchy had the opportunity to study this document at three levels: the presbyterium studied it in March 2019, the leaders of religious communities discussed it in July 2019 and the young people of the Eparchy went through the document during the youth convention. Basing on the questions that were given to these groups for their study and discussion, some points have emerged for further discussion and action.  I give below these points for our reflection and implementation in our Eparchy.

**Question 1: What are the challenges faced by the youth of today in our Eparchy?**

1. There are no motivated leaders to guide the youth
2. We force our own ideas on the youth rather than trying to know their interest and views
3. Influence of media on young people are immense
4. Family background is not helping the youth to grow in Christian faith
5. The parish council does not give enough encouragement and it does not recognise their abilities and talents
6. Parents do not allow the young girls to engage in church activities because they are afraid they might go astray
7. The youth is dispersed for study and work.Hence, unable to come together
8. There is nobody at home to hear their problem
9. Do not get any good formation from their homes
10. High ambitions and goals set by the parents

11. Comparison with other young people have negative influence
12. Lack of good example
13. There is no prayer in families, no interest in liturgical celebrations
14. Lack of interest in spiritual activities
15. Face only criticism by the parents and society.
16. Not accepted/recognised by others
17. Prior judgment on youth activities
18. Generation gap in the parish
19. Youth have inferiority complex
20. Identity crisis, uncertainty about life, etc.
21. Unemployment: their dreams are not fulfilled, unable to fulfil their parents' dream, looking for socially accepted jobs and lack particular aim in life
22. Attention seeking
23. Addiction to: Social media, Phonography, drugs and alcohol, computer games, Extra ordinary and dirty fashion, nasty hairstyle and gadgets.
24. They face abuse from family, friends and relatives. Young people have unpleasant childhood experiences.
25. Negative orientation towards sex
26. Lack a sense of sin

**Question 2: What are the challenges that the priests and the religious face in youth ministry?**

1. Youth are Indifference towards spiritual activities
2. Generation gap (Old and new generation)
3. We are unable to understand the situation of youth
4. Influence of social media, addiction and drug abuse
5. Administration vs pastoral ministry
6. Difficulty in gathering all the youth
7. They are more sensitive
8. Over burdened with duties and responsibilities given by the diocese/Congregation
9. Not equipped with sufficient skills to face the youth
10. Bias attitude towards them
11. Waiting for them to come to us rather than we go to them
12. Take them as problems

**Question 3: As priests and religious, how are we going to help the youth to face these challenges?**

1. Correct the youth with love and affection
2. Pray for them
3. Being a good friend to them and cultivate good relationships
4. Trusting them and giving them the responsibility
5. Living an exemplary life rather keep giving advise to them
6. Encourage the youth even when they do small good things
7. Continuous and patient following up
8. We need to make them understand that we are really interested in their problems
9. As spiritual leaders we need to approach them lovingly and respectfully.
10. We do not look at them as problem makers
11. We give an integral accompaniment: internal and external, spiritual and worldly
12. Mould them to make active participants in church activities: Example: Catechism teachers, organising liturgical programmes, etc.
13. We need toorganise youth empowerment programme, skill develop, sexual education in parish level, etc.
14. Train them in leadership like making at least one youth as Kaikaran in the parish
15. Spending time with them to guide, interact and counsel them
16. Implementing parish level youth programmes, convention and youth catechism etc.
17. Priest needs to be more a pastor than an administrator
18. Humble enough to go to the level of youth and interact with them
19. In the parish, meet them together, pray with them, have meals together and organise festivals together
20. Priests should make special prayersfor the youth during the Holy Qurbana.

I am sure we will have ample opportunities in the coming days to deliberate upon these points and to take appropriate decisions for their implementation in our various settings. Kindly ruminate over these points yourselves before such meetings can take place. Please keep in mind that young people are the future of our Church. Unless and until we care for them, our future will be very bleak in

every respects.

**CONCLUSION**

During the month of August, we had come together as fellow workers of the Eparchy to celebrate the feast of St John Maria Vianney. This celebration gave us an opportunity to recall our own priesthood and to resolve to live it like St John Maria Vianney by administering the sacraments especially the sacrament of reconciliation as he did. Let us make use of occasions such as Feasts of patron Saints of our parishes to boost the faith of our people. In the coming month, we shall celebrate one of the important feasts of Blessed Virgin Mary, namely, the Nativity of Mother Mary. The celebration of this feast is a wonderful opportunity for us to grow in Marian piety. Kindly solemnise the eight days fast (EttuNonbu) in all our parishes. Let us prepare our people and celebrate it meaningfully. Kindly keep the mission of the Church and the needs of our Eparchy in your daily prayers.

With my prayers and blessings,

Yours in Christ Jesus

+ George Rajendran SDB
Bishop of Thuckalay

## தேனியில் புதுத்திருத்தொண்டுத் தளம்

இடுக்கி மாகாணத்தைச் சேர்ந்த FCC அருட்சகோதரிகள், தேனியில் திருத்தொண்டுப் பணிகளை ஆகஸ்ட் 12, 2019 அன்று தொடங்கினார்கள். அன்றைய தினம், காஞ்ஞிரப்பள்ளி மறைமாவட்ட துணை ஆயர் மார் ஜோஸ் புலிக்கல் அவர்கள் வருகை தந்தார்கள். தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் இல்லத்தை மந்திரித்தார். திருத்தொண்டுத்தள பொறுப்பு அருட்தந்தை பென்னி தட்டாபறம்பில் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/16/2019

**தக்கலை மறைமாவட்டம்**

**6 - ஆம் அருட்பணிப் பேரவைத் தேர்தல்**

தக்கலை மறைமாவட்ட அருட்பணிப்பேரவை 18.12.2001 முதற்கொண்டு இந்நாள்வரை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இப்பேரவை குருக்கள், கன்னியர், பொதுநிலையினர், பக்த இயக்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மறைமாவட்டத்தின் ஓர் உயர்ந்த அமைப்பாகும். இஃது ஆயர் அவர்களின் மேய்ப்புப் பணியில் ஆலோசனை வழங்கும் ஓர் அமைப்பாகும். இதுவரை ஐந்து அருட்பணிப் பேரவைகள் நம் மறைமாவட்டத்தில் உருவாகி வருடந்தோறும் மூன்று, இரண்டு முறை எனக் கூடி செயல்பட்டுள்ளன. கடந்த ஐந்தாவது பேரவை நிறைவடைந்துள்ள நிலையில் ஆறாவது பேரவை 01.11.2019, வெள்ளிக்கிழமை தொடங்க உள்ளது. அதற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பினை தேர்தல் குழுவிடம் ஒப்படைத்துள்ளேன். பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் தலைவராகவும், அருட்தந்தை மிஜோ புத்தன்புரையில், திரு. ஜான் (குமரித்தோழன்) ஆகியோர் உறுப்பினர்களாகவும் செயல்படுவார்கள். அதற்கிணங்க நெறிமுறைகள் வெளியிடப்படுகின்றன.

**தேர்தல் நாள்:**

**பங்களவில்:**

- ஆகஸ்டு 18, 25 செப்டம்பர் 1 ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் ஏதேனும் ஒருநாள்.

**மறைவட்டஅளவில்:**

- செப்டம்பர் 8, 15, 22, 29 அக்டோபர் 6, 13 ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 2.00 மணிக்கு நிகழ்வுகள் தொடங்கும்.
- ஒருநாள் ஒரு மறைவட்டம் என்ற வகையில் தேர்தல் நடைபெறும்.

தேர்தல் நடைமுறைகள்:

**பங்களவில்:**

- 6 பேர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

- 18–35 வயதுக்குட்பட்டோர் இருவர்
- 36–50 வயதுக்குட்பட்டோர் இருவர்
- 50– வயதுக்குமேற்பட்டோர் இருவர்
- ஆறு பேரில் பெண்கள் குறைந்தபட்சம் இரண்டுபேரும் அதிகபட்சம் நான்குபேருமாக இருக்கலாம்.
- ஆறு பேரில் ஆண்கள் குறைந்தபட்சம் இரண்டுபேரும் அதிகபட்சம் நான்கு பேருமாக இருக்கலாம்.

**மறைவட்டதேர்தல்:**

- 18–35 வயதுக்குட்பட்டோர் இருவர்
- 36–50 வயதுக்குட்பட்டோர் இருவர்
- 50– வயதுக்கு மேற்பட்டோர் இருவர்
- பெண்கள் குறைந்தபட்சம் இருவர் அதிகபட்சம் நால்வர்.
- ஆண்கள் குறைந்தபட்சம் இருவர் அதிகபட்சம் நால்வர்.
- மஞ்சாலுமூடு மறைவட்டத்தில் பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் மேற்குறிப்பிடப்பட்ட விகிதாச்சாரத்தின்படி 12 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**தேர்தல் ஏற்பாடுகள்:**

**தேர்தல் அறிவிப்பு:**

- பங்களவில் தேர்தல் நடைபெறும் நாளுக்கு முந்தைய ஞாயிற்றுக் கிழமை பங்குத் தந்தையால் தேர்தல் நாளும் வாக்காளரின் தகுதிகளும் அறிவிக்கப்படவேண்டும்.
- மறைவட்ட தேர்தல் தேதி தேர்தல் நடைபெறும் நாளுக்கு ஒருவாரம் முன்னர் தேர்தல் நடத்தும் குழு தலைவரால் மறைவட்ட பேரருட்தந்தை வழியாக அறிவிக்கப்படும்.

**தேர்தல் ஏற்பாடுகள்:**

- பங்களவில் பங்குத்தந்தை கைக்காரர்களோடு இணைந்து செயல்படுவார்.
- மறைவட்ட அளவில் மறைவட்ட பேரருட்தந்தை அதற்குட்பட்ட பங்குத் தந்தையர்களோடு இணைந்து செய்யவேண்டும்.

**தேர்தல்:**

**பங்களவில்:**

- பங்குத்தந்தை தலைமையில் கூட்டம் கூடும்.
- பங்குத்தந்தை வேட்பாளரின் தகுதிகளை எடுத்துக் கூறுவார்.
- வேட்பாளர் முன்மொழிவு
- வேட்பாளர்கள் அறிமுகம்

- இரகசிய வாக்கெடுப்பு
- வாக்குகளை எண்ணுதல்
- ஒவ்வொருவரும் பெற்ற வாக்குகள் அறிவிப்பு
- விதிமுறைகளின்படி வெற்றிபெற்றோரை அறிவித்தல்

**மறைவட்டஅளவில்**

- மறைவட்ட பேரருட்தந்தை தலைமையில் கூட்டம் கூடும்.
- தேர்தல் குழு வாக்காளருக்கான தகுதிகளை விவாதிக்கும்.
- வேட்பாளர் முன்மொழிவுகள்
- வேட்பாளர்கள் அறிமுகம்
- இரகசிய வாக்கெடுப்பு
- வாக்குகளை எண்ணுதல்
- ஒவ்வொருவரும் பெற்ற வாக்குகள் அறிவித்தல்
- விதிமுறைகளின்படி வெற்றி பெற்றோரை அறிவித்தல்

**வேட்பாளரின் தகுதிகள்:**

- பங்கின் உறுப்பினராக இருத்தல்.
- பங்கின் நடைமுறைகளோடு இணைந்து செயல்படுபவர்.
- திருவருட்சாதன கொண்டாட்டங்களில் கலந்துகொள்பவர்.
- மறைவட்ட அருட்பணிப் பேரவைக் கூட்டங்களில் தவறாது கலந்துகொள்வேன் என உறுதி உள்ளவர்.
- திருச்சபையின் தண்டனைகளுக்கு உட்படாதவர்.
- சமூகம் சார்ந்த குற்றவழக்குகளில் சிறைத்தண்டனை பெறாதவர்.
- திருச்சபையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ஒழுகுபவர்.
- பங்கின் அன்றாட நடைமுறைகளிலும் பக்த இயக்கங்களிலும் தம்மை இணைத்து நேர்மையுடனும் மனசாட்சியுடனும் செயல்படுவது விரும்பத்தக்கதாகும்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

+ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை 11.08.2019 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.

**Bishop George Rajendran sdb**
Diocese of Thuckalay

Pastoral Letter No/GR/39/2019

## ஆயர் திருமுகம்

**ஈசோ மெசியாவில்**
**அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

இறைமகன் ஈசோ மெசியாவை உலகுக்குத் தந்து மீட்பின் மாட்சிக்கு சாட்சியான அன்னையாம் தூய கன்னிமரியாளை, தாய்த்திருச்சபையின் மிகச்சிறந்த புனிதராகக் கத்தோலிக்கர்களாகிய நாம் ஏற்று, போற்றிப் புகழ்வது தனிச்சிறப்பெனக் கருதுகிறேன். பாலஸ்தீன நாட்டில் பிறந்த அன்னை மரியாவின் பிறந்த நாள் கொண்டாட்டம் மிகப் பழமையான ஒன்றாக இருந்தாலும், திருச்சபையில் எட்டாம் நூற்றாண்டிலிருந்து மட்டுமே செப்டம்பர் எட்டாம் நாள் அன்னையின் பிறந்த நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

உரோமைத் திருச்சபைக்கு இந்த எட்டு நாள் வழிபாட்டுக் கொண்டாட்டம் கிழக்கத்தியத் துறவிகளால் அறிமுகம் செய்யப்பட்டது. அதுமுதற்கொண்டு உரோமைத் திருச்சபையும் இத்தவ வழிபாட்டை அன்னைக்கு என அர்ப்பணித்துக் கொண்டாடி வருகின்றது. கிழக்கத்தியத் திருச்சபைகளாலும், மேலேத் திருச்சபைகளாலும் இந்நாட்கள் ஜெப தவ முயற்சிகளாகக் கடைபிடிக்கப்பட்டு வரப்படுகின்றன.

தூய கன்னிமரியாவின் பிறப்பு விழாவினை திருச்சபை செப்படம்பர் 1 முதல் 8–ம் தேதி வரை “எட்டு நாள் நோன்பு” என்னும் பெயரில் கொண்டாடி வருகிறது. இந்த எட்டு நாள் நோன்பு கொண்டாட்டமானது கேரளாவில் அனைத்து தனிதிருச்சபைகளின் எல்லா ஆலயங்களிலும் கொண்டாடப்பட்டு வந்தாலும் கோட்டயம் மாவட்டத்திலுள்ள மணற்காடு தூய மரியன்னை பேராலயத்தில் சீரோடும் சிறப்போடும் கலை நிறை விழாவாக செப்டம்பர் ஒன்றாம் நாள் முதல் எட்டாம் நாள் வரை “எட்டு நோன்புப் பெருநாள்கள்” என்ற அருட்சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. இப்பேராலயம் சிரியன் ஆர்த்தோடக்ஸ் திருச்சபையின் அக உறுப்பாக உள்ளது. இந்த எட்டு நாட்களும் கேரளாவின் சிரியன்

திருச்சபைகளின் மக்களும், ஆயிரக்கணக்கான மரியாயின் சேனை மற்றும் மாதர் ஜோதிஸ் உறுப்பினர்களும், பிற மத மக்களும் ஒன்று கூடி மரியாவின் புகழ் பாடும் விதமாக செப தவ வழிபாட்டுக் கொண்டாட்டங்களில் முழு மகிழ்வுடனும் பக்திப் பற்றுதலுடனும் ஈடுபடுவது வழக்கமாக உள்ளது.

தற்போதும் சாதி மதம் பாராது அனைத்து மக்களும் ஒன்று கூடி பல்வேறு கருத்துக்களுக்காக அன்னையின் திருமுன்னிலையில் அமர்ந்து மனமுருகி வேண்டி, தமக்கு தேவையான வரங்களைப் பெற்று வளம் காண்கின்றனர். காரணம் தன்னை அண்டி வந்து வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களை தம் திருமகன் ஈசோ வழியாக பொழிபவள் அன்னை மரியாள் என்பது வெள்ளிடைமலை.

அன்பார்ந்தவர்களே! இந்நேரம் இருபெரும் வரலாற்று உண்மைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அன்னை–யிடம் அடைக்கலம் புகுந்தோர் கைவிடப்படார் என்பதற்கு இந்நிகழ்வுகள் மாபெரும் சான்று என்றே உணர்கின்றேன். கி.பி. 1784–ம் ஆண்டு கேரளாவை வெற்றிக்கொள்ள எண்ணிய சுல்தானிய வம்சத்தவரான திப்பு சுல்தான் ஆலுவா என்னுமிடத்தில் காலூன்றி கிறிஸ்தவத்திற்கு எதிராகச் செயல்பட்டான். குறிப்பாக கிறிஸ்தவ பெண்கள் மீது கடுமையான கொடுஞ் செயல்களில் ஈடுபட்டான். நிலை குலைந்து போன கிறிஸ்தவ பெண்கள் அன்னை மரியிடம் அடைக்கலம் புகுந்து எட்டு நாட்கள் நோன்பிருந்து ஆலுவா ஆற்றங்கரைப் படுகையில் அமர்ந்து அன்னையிடம் முறை–யிட்டனர். அன்னையின் ஆற்றலால் கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவ பெண்களையும் கொடுமைப்படுத்திய திப்புசுல்தான் பின் வாங்கினான். அனைத்து ஆற்றல்களையும் இழந்தான். மரணத்திற்கான எவ்வித ஆன்ம தயாரிப்பும் இல்லா நிலையில் இறந்ததாக வரலாற்று நிகழ்வு நமக்கு சான்று பகர்கின்றது. இந்நிகழ்வை நினைவு கூர்ந்து கேரளத்து மக்கள் இன்றும் அன்னை மரியாவுக்கு நன்றி நவின்று ஜெபிக்கிறார்கள்.

மற்றுமோரு நிகழ்வு: கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ‘பசுரா’ என்னும் நகரின் அருகில் ‘கீரா’ என்னும் அழகிய நகரம் இருந்தது. அந்நகர் முழுவதும் கிறிஸ்தவ மக்களைக் கொண்டதாயிருந்தது. ஈராக் தலைநகர் பாக்தாத்தை ஆண்ட கலிஃப்பாக்களால் கீரா நகரம் கைப்பற்றப்பட்டு இஸ்லாமிய ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டது. இஸ்லாமிய ஆளுநர் இஸ்லாமிய நலன் ஒன்றையேக் குறிக்கோளாகக் கொண்டு கிறிஸ்தவத்தையும், கற்புநெறி பிறழாமலும், ஒழுக்க வழியில் வழுவின்றியும் வாழ்ந்த நம் கிறிஸ்தவப் பெண்களிடம் முறைதவறி மிருக வெறி கொண்டு நடக்கலானான். அச்சத்தின் விளிம்பில் அரண்டு நின்ற கீரா நகரத்துப் பெண்கள் அங்குமிங்கும் ஓடி அன்னையின்

திருவடியை நாடினர்.

எந்த தாமதமுமின்றி அங்கிருந்த அருட்பணியாளர் மூன்று நாள்கள் நோன்பை அறிவித்து அன்னை மரியிடம் மண்டியிட்டு வேண்டிடப் பணித்தார். மூன்றாம் நாள் திருப்பலியின் ஒப்புக் கொடுத்தல் வேளையில் வானத்திலிருந்து ஒளி வெள்ளம், ஆங்கோர் தூண் போல் பாய்ந்து அத்திருக்கோவில் முழுதும் ஒளியால் சூழ்ந்தது. அந்நேரம் அருட்பணியாளர் மற்றும் மக்கள் முன் அன்னை தோன்றி "அச்சம் கொள்ளாதீர்! உங்களுக்கு அமைதி உண்டாகட்டும்! மகிழ்ந்து களி கூறுங்கள்! கலிஃப்பாக்களால் உங்களை அண்ட இயலாது. அவர்கள் இல்லாமல் போயினர்; உங்கள் துன்பங்கள் அழிந்தொழிந்தன" எனத் திருவாய் மொழிந்தார். அபலைகளாய் அன்னையை அண்டி வேண்டி நின்ற மக்கள் அன்னைக்கு கண்ணீர்க் கண்களோடு நன்றி செலுத்தினர். அன்றிலிருந்து செப்டம்பர் ஒன்று முதல் அன்னையின் பிறந்த நாளாம் எட்டாம் நாள் வரை நோன்பிருந்து செப, தவ, ஒறுத்தல் முயற்சிகள் செய்து காலம் காலமாகத் தொடர்ந்து அன்னைக்குப் புகழ்மாலை சூட்டிப் பணிந்து வணங்கி வருகின்றனர். மேலே கூறிய இரு நிகழ்வுகளும் அன்னையின் அரவணைப்பை உணர்த்தும் சிறு சிறு சான்றுகளே!

எனவே, அன்பார்ந்த இறைமக்களே! அன்னையின் பிறந்த நாளாகிய செப்டம்பர் 8–ஆம் நாளுக்கு முந்தைய இத்தவ நாட்களில் மனத்தாலும் உடலாலும் ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொள்வோம். மனத்தாலும், உடலாலும், ஜெபத்தாலும், தவத்தாலும் நாம் அன்னையின் ஆழ்ந்த அன்பிலும் அரவணைப்பிலும் மூழ்கி விசுவாசத்தில் நம்பிக்கைக்கொண்டு, பாரம்பரிய சடங்குகள் மற்றும் செப வழிபாடுகளில் பக்தியுடன் ஈடுபடுவோம். இந்த எட்டு தவ நோன்பு நாட்களானது நமது தேசத்தின் புனிதரான புனித தோமையாரையும் அனுதினமும் நினைவு கூரும் ஆன்மீக அருள்நிறை நாட்களாக அமையட்டும்.

"இதோ உமது அடிமை உம் திருவுளப்படியே எனக்கு ஆகட்டும்" எனத் தன்னையே இறைமுன் தாழ்த்திய அன்னையின் தாழ்ச்சியை நாமும் மனதில் கொண்டு, தாழ்ச்சியுடையோராய் வாழ்வோம். அருள் நிறைந்தவளாம் அன்னையின் அருளை நாமும் அடைய அன்னையின் முன் மண்டியிட்டு, அவள் திருக்கரங்களில் அணி செய்யும் செபமாலையைத் தொடர்ந்து சொல்வோம். இந்த எட்டு நாள்களும் அவரவர் ஆலயங்களில் மரியாயின் சேனையினரும் இறைமக்கள் அனைவரும் ஒன்றுகூடி அன்னையின் பாதம் அமர்ந்து ஜெபிப்போம்.

நமது மறைமாவட்டத்தில் அன்னையின் பிறந்த நாளை முன்னிட்டு செப்டம்பர் 1 ம் நாள் முதல் எட்டாம் நாள் வரை எல்லா நாட்களிலும் சிறப்புத் திருப்பலியும்

எட்டுநாள் நோன்பு செபமும் நடத்த வேண்டுகிறேன். அதற்கான செபபுத்தகத்தையும் இத்திருமுகத்துடன் அனுப்புகிறேன். தொடர்ந்து உங்கள் நோன்பு நாள் மன்றாட்டுக்கள் நிறைவேற நான் செபிக்கிறேன். ஆன்மீக அருள்வாழ்விற்கு அன்னை மரியாவின் வழியான பக்தி முயற்சிகள் ஆதாரமாயிருப்பது முற்றிலும் உண்மையானதால் இந்த நோன்பு நாட்களில் அனைவரும் அணி திரண்டு அன்னையிடம் செபித்து அன்னையின் அருள்வரங்களால் நிறைவு பெறுவோம். ஆன்மீக ஆற்றலைப் பெற மரியாயின் சேனை அமையப் பெறாத பங்குகளில் மரியாயின் சேனை பிரசீடியங்கள் உருவாக்கி அன்னையின் பக்தியில் உறுதிபடவும் உங்களை இவ்வேளையில் அழைக்கின்றேன்.

அன்னையின் பிறந்த நாளாகிய செப்டம்பர் 8–ஆம் நாள் ஞாயிறு அன்று காலைத் திருப்பலியைத் தொடர்ந்து மறைக்கல்விக்கு பிறகு மரியாயின் சேனையினரும் ஒவ்வொரு பங்கின் உறவியத்தாரும், உறவியத்திற்கு ஒருமணி நேரம் என ஒதுக்கீடு செய்து காலை முதல் மாலை வரை வல்லமை மிகுந்த ஜெபமாலையைத் தொடர்ந்து செபித்து இறுதியில் தூய மரியன்னையின் திருசொருபத்தைத் ஏந்தி ஆலயத்தைச் சுற்றி செபமாலை பவனி நடத்தி தூய மரியன்னைக்கு பிறந்த நாள் பரிசளிப்போம். வீடற்றோர் வீடு பெற, மழலைச் செல்வம் இல்லாதோர் மழலைச் செல்வம் பெற, தேவையில் உழல்வோர் தேவையில் நிறைவு பெற, வெளிநாடு – உள்நாடு என உழைப்போர் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெற, அமைதி இழந்தோர் மன அமைதி பெற, வேலை வாய்ப்பற்றோர் வேலை பெற என இன்னும் தத்தம் வாழ்வுக்குத் தேவையான அனைத்து நலன்களையும் நமது எட்டு நாள் நோன்புகளால் அன்னை நமக்கு அருள்வாராக! செபிப்போம்; வளர்வோம். அன்னையின் ஆசியும் அருளும் நம்மில் என்றும் நிறையட்டும் என வாழ்த்தி செபிக்கிறேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

என்றும் ஈசோ மெசியாவில்

+ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இவ் ஆயா; திருமுகத்தை 25.08.2019 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.



# CATECHISM
# மறைக்கல்வி

கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதனுக்குரிய இயல்பை அணிந்துக் கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும் (எபேசியர் 4 :24 )

**அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் !**

**தலைமையாசிரியர்களின் கூட்டம்** :-

மறை மாவட்ட மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் கூட்டமானது ஆகஸ்ட் 10 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை. பிறின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையில் தூய ஆவிப் பாடலுடன் ஆரம்பமானது. தலைமையாசிரியர் திரு. விஸ்வநாதன் அவர்கள் இயக்குநர் தந்தை அவர்களையும் வருகைபுரிந்த அனைவரையும் வாழ்த்தி வரவேற்றார். செயலர் அருட்சகோதரி. ட்றீசா ஜோஸ் அறிக்கை வாசித்தார். இயக்குநர் தந்தை அவர்கள் மறைக்கல்விப்பணி என்பது 'நம்முடைய செயல்பாடுகள் வழியாகவும், முன்மாதிரியான வாழ்வு வழியாகவும் வெளிப்பட வேண்டும்' என்று கூறினார். இக்கூட்டத்தின் போது முதல் பருவத் தேர்வுக்கான தமிழ் மற்றும் மலையாளம் வினாத்தாள் தயாரிப்பதற்கான பொறுப்பு வெவ்வேறு மறைக்கல்வித் தளங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.. மறைவட்ட அளவில் நடைபெறும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடைபெறும் தேதி மற்றும் இடம் அறிவிக்கப்பட்டது. மேலும் விவிலியக் கலைவிழா 2019– 2020 ஆண்டிற்கான எழுத்து மற்றும் ஓவியப் போட்டிக்கான தலைப்பு கொடுக்கப்பட்டது. 10 மற்றும் 12 வகுப்புகளுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. திருமதி ஸ்னேகலதா ஆசிரியரின் நன்றியுரையுடன் கூட்டமானது இனிதே முடிவுற்றது.. இறுதியாக அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

**ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு - தக்கலை பிலாங்காலை மறைவட்டம்**

தக்கலை பிலாங்காலை மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு பிலாங்காலை மறைவட்ட ஆலயத்தில் வைத்து ஆகஸ்ட் 10 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை. பிறின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிலாங்காலை மறைக்கல்வி நிலைய ஆசிரியர்கள் இறைவணக்கப் பாடல் பாடினர். மறை வட்ட இயக்குநர் அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் வருகைபுரிந்த அருட்தந்தையர்களையும் மற்றும் அனைவரையும் வரவேற்று உரை

நிகழ்த்தினார். அருட்தந்தை. ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தொடக்கத் திருவருட்சாதனங்களைப் பற்றி எளிய முறையில் அனைவருக்கும் புரியும் வகையில் மிகச் சிறப்பாக வகுப்புகள் நடத்தினார். பிலாங்காலை மறை வட்டத்திலுள்ள ஆசிரியர்கள் 103 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பின் கருத்தரங்கானது சுமார் 4.30 மணியளவில் பரைக்கோடு ஆசிரியை திருமதி ஆன்சி ஜஸ்டின் அவர்களின் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது. இறுதியாக அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

தக்கலை பிலாங்காலை மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த பிலாங்காலை மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்களுக்கும், பிலாங்காலை மறைவட்ட ஆலயத்தின் பங்குத்தந்தை தோமஸ் தெக்கேத்தலக்கல் அவர்களுக்கும், மறைவட்ட செயலர். அருட்சகோதரி. பாவனா FCC அவர்களுக்கும், பிலாங்காலை மறைவட்டத்திலுள்ள அனைத்து அருட்தந்தையர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

**ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு - மஞ்சாலுமூடு மறைவட்டம்**

மஞ்சாலுமூடு மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மஞ்சாலுமூடு மறைவட்ட ஆலயத்தில் வைத்து ஆகஸ்ட் 25 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை பிறின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மறைக்கல்வி நிலைய ஆசிரியர்கள் இறைவணக்கப் பாடல் பாடினர். மறை வட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் வருகைபுரிந்த அருட்தந்தையர்களையும் மற்றும் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். பேரருட்தந்தை. டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் தொடக்கத் திருவருட்சாதனங்களைப் பற்றி எளிய முறையில் அனைவருக்கும் புரியும் வகையில் மிகச்சிறப்பாக வகுப்புகள் நடத்தினார். மஞ்சாலுமூடு மறைவட்டத்திலுள்ள ஆசிரியர்கள் 146 பேர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். பின் கருத்தரங்கானது சுமார் 4.30 மணியளவில் அருட்சகோதரி அனு SH அவர்களின் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது. இறுதியாக அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

மஞ்சாலுமூடு மறை வட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த மஞ்சாலுமூடு மறை வட்ட இயக்குநர் அருட்தந்தை

ஜோஸ் வயலில் அவர்களுக்கும், மஞ்சாலுமூடு மறைவட்ட ஆலயத்தின் பங்குத்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்களுக்கும், மறை வட்ட செயலர். அருட்சகோதரி. அனு SH அவர்களுக்கும், மஞ்சாலுமூடு மறை வட்டத்திலுள்ள அனைத்து அருட்தந்தையர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

---

BIBLE FEST – 2019 -2020
Writing Competition for students
Date : 13– 10- 2019
Time : 2.30 Pm – 4.30 Pm

| SECTION | TOPICS |
|---|---|
| Sub Junior -Colouring | Bible Pictures |
| Junior - Pencil Drawing | Luke 1- 5 |
| Senior - Pencil Drawing | Luke 6 - 12 |
| Senior - Essay Writing | கத்தோலிக்க விசுவாசத்தை உருவாக்குவதில் மறைக்கல்வியின் பங்கு |
| SupSenior - Pencil Drawing | Luke 13-18 |
| SupSenior – Poetry Writing | Luke 19-24 |

**Age Limit**

Sub Juniors - 9 வயது வரை 2011 ஜனவரி 31–க்கு பின் பிறந்தவர்கள்
Juniors - 9 வயது முதல் 13 வரை 2007 ஜனவரி 31–க்கு பின் பிறந்தவர்கள்
Seniors - 14 வயது முதல் 16 வரை 2004 ஜனவரி 31–க்கு பின் பிறந்தவர்கள்
Sup Seniors - 17 வயது முதல் 20 வரை 2000 ஜனவரி 31–க்கு பின் பிறந்தவர்கள்

**இதர அறிவிப்புகள்**

1. September 15 Sunday - Teachers Seminar Padanthalumoodu Forane at Padanthalumoodu at 2.00 Pm
2. September 10 Tuesday – Students Leaders Meet at Kalluvilai at 10.00 am (date may change) Last date to submit the list of Bible fest writing competition

**அருட்தந்தை பிரின்ஸ் மாலியில்**
**இயக்குநர்**

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

**அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் !**

**இளையோர் இயக்கத்தின் புதிய மறைவட்ட இயக்குநர்கள்**

Thuckalay- Pilankalai - Fr. Thomas Thekkethala CMI
Nithiravilai - Fr. Robins Kuzhikodil
Arukani - Fr. Tobin Alappurackal
Manjalumoodu - Fr. James (Vinod) Kanakalil
Padanthalumoodu - Fr. Thomas Jebanesh
Soosaipuram - Fr. Subin Puthenpurackal

**மறைமாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் மறைவட்ட இயக்குநர்கள் கூட்டம்**

தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தின் மறைமாவட்ட கூட்டமானது 18-8-2019 ஞாயிற்றுக்கிழமை மதியம் 3 மணி அளவில் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இயக்குநர் தந்தை தலைமை தாங்கினார். மறைவட்ட இயக்குநர்களில் 3 பேர் கலந்து கொண்டனர். மறைமாவட்ட பொறுப்பாளர்கள் 7 பேர் கலந்து கொண்டனர். தூய ஆவியின் பாடலுடன் திருவிவிலியம் வாசித்து கூட்டமானது ஆரம்பமானது. அனைவரையும் துணைத்தலைவர் வரவேற்றார். தொடர்ந்து இந்த ஆண்டின் முதல் கூட்டம் ஆனதால் அவரவர் தங்களையே அறிமுகப்படுத்தினர். தொடர்ந்து TCYM கிளை; மறைவட்ட, மறைமாவட்ட, செயல்பாடு; இளைஞர்களின் Data collection; உறுப்பினர் படிவம் புதுப்பித்தல் மற்றும் புதிய உறுப்பினர்களை சேர்த்தல்; Docat Class மற்றும் Sunday College; English, Media, Parai Training, Narumuhizh Creation; தொடர்ந்து வரவிருக்கும் நிகழ்வுகளான இளைஞர்களின் தியானம்; ஆயருடன் ஒருநாள்; இளைஞர்களின் கலைவிழா; போன்ற அஜண்டாக்களை வைத்து விவாதங்கள் நடைபெற்றன.

**இதில் முக்கியமாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கீழே :**

1. மறைவட்ட அளவிலான கூட்டங்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

2. மறைவட்ட இயக்குநரின் தலைமையில் மறைவட்டத்திற்கு உட்பட்ட பங்குகளில் இயக்கத்தை பார்வையிடுதல்.

3. Data Collection, உறுப்பினர் படிவம் புதுப்பித்தல் மற்றும் புதிய உறுப்பினர்களை சேர்த்தல் செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிக்க வேண்டும்.

4. அனைத்து பங்குகளிலும் உடனடியாக Docat வகுப்பை ஆரம்பிக்க வேண்டும்.

5. இளைஞர்களின் தகுதிக்கேற்ற வேலைகளை கண்டறிவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

6. மறைவட்ட கூட்டத்தில் பங்கு அளவிலான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

7. மறைமாவட்ட கூட்டத்தில் மறைவட்டம் சார்ந்த அறிக்கை கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

8. இளைஞர்களின் தியானத்திற்கு ஒருபங்கில் இருந்து குறைந்தது ஒருநபரையாவது பங்கெடுக்க வைத்தல் வேண்டும்.

9. இளைஞர்களின் கலை விழாவுக்கான நோட்டீஸ் ஒரு மாதத்திற்கு முன்னால் பங்குகளில் கொடுக்க வேண்டும்.

போன்ற முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இறுதியில் இயக்குநர் தந்தை இளைஞர்களின் வளர்ச்சிக்காக நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று உரையாற்றினார். இளைஞர் இயக்க பாடலுடன் கூட்டம் முடிவடைந்தது.

**ஷீஜி, செயலர்**

---

# மேய்ப்புப்பணித் துறை பொறுப்பாளர்களின் சந்திப்பு

குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்களுடன் இணைந்து ஆயர் அவர்கள் மேய்ப்புப்பணித் துறைப் பொறுப்பாளர்களை சந்தித்தார். கூட்டத்தின் போது, மறைக்கல்வி மற்றும் இளையோர்ப்பணி சார்ந்த மறைவட்ட இயக்குநர்கள் அறிவிக்கப்பட்டார்கள். மறைக்கல்வியின் மறைவட்ட இயக்குநர்களாக, அருட்தந்தை ஆன்டணி மாடப்புரைக்கல் (ஆறுகாணி), அருட்தந்தை ஜோஸ் வயலில் (மஞ்சாலுமூடு), அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடம் (நித்திரவிளை), அருட்தந்தை அஜின் ஜோஸ் (தக்கலை–பிலாங்காலை), அருட்தந்தை அனில் ராஜ் (படந்தாலுமூடு), அருட்தந்தை ஆன்டணி ஜோஸ் (சூசைபுரம்) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இளையோர் இயக்க மறைவட்ட இயக்குநர்களாக, அருட்தந்தை தோமஸ் தெக்கேத்தலா CMI (தக்கலை–பிலாங்காலை), அருட்தந்தை சுபின் புத்தன்புரைக்கல் (சூசைபுரம்), அருட்தந்தை ரோபின்ஸ் குழிகோடில் (நித்திரவிளை), அருட்தந்தை தோமஸ் ஜெபனேஷ் (படந்தாலுமூடு), அருட்தந்தை ஜேம்ஸ் (வினோத்) கானாகாலில் (மஞ்சாலுமூடு), அருட்தந்தை டோபின் ஆலப்புரைக்கல் (ஆறுகாணி) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்

சிறுமலர் MISSION LEAGUE



# மிஷன்லீக் இயக்கம்

**அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் !**

3-08-2019 அன்று மதியம் 3.00 மணியளவில் சிறுமலர் மிஷன்லீக் இயக்க பொறுப்பாளர்கள் கூட்டம் இயக்குநர் தந்தை அலெக்ஸ் புத்தேட் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது. அன்றைய கூட்டத்தில் ஒரு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. சிறுமலர் மாத இதழ் எல்லா மாதமும் வெளியிடுதல் எல்லா குடும்பங்களும் அதனைப் பயன்படுத்திப் பயன் பெறுதல்.

2. சிறுமலர் இதழுக்குத் தேவையான தகவல்கள் மறைவட்டம் வாரியாக சேகரித்து வெளியிடல். இதன்படி ஆறுகாணி, மஞ்சாலுமூடு, நித்திரவிளை, படந்தாலுமூடு, சூசைபுரம், தக்கலை-பிலாங்காலை என்ற வரிசைப்படி அமையும்.

3. ஆகஸ்ட் மாதம் முதல் இதன் அடிப்படையில் செயல்படுத்தல்.

4. தந்தை அவர்களுக்கு உதவியாக திரு.ஞானதாஸ் அவர்கள் செயல்படுதல். ஆனிமேற்றர்களும் படைப்புகள் எழுதி தந்தை அவர்களுடன் ஒத்துழைத்தல்.

5. படைப்புகள் எழுதும் போது மாணவர்களின் மனநிலைக்கு ஏற்ப புரிந்துகொள்ளும் வகையில் கதை, கவிதை, கட்டுரை, படங்கள் எழுதுதல் மற்றும் வரைதல்.

6. மிஷன்லீக் உறுப்பினர்களின் பிறந்த நாள் புகைப்படத்துடன் பதிவுசெய்தல்.

7. போட்டிகள், கருத்தரங்கு, தியானம் நடத்துதல்

8. மூன்று மாதத்திற்கு ஒருமுறை Visit நடத்துதல். மறைக்கல்வி முடித்த ஒரு இளைஞன் இதற்கு தேர்வு செய்யப்படுவார். Sept மாதம் முதல் Visit நடைபெறும்.

போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. பின் இறுதி ஜெபத்துடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.

**ஈசோவில் என்றும் அன்புடன்**
**அலெக்ஸ் புத்தேட்**
**இயக்குநர்**

## மறைவட்ட குருக்களின் கூட்டம்

ஆகஸ்ட் மாதத்தில் மறைவட்ட வாரியான குருக்களின் கூட்டங்கள், சூசைபுரம், தக்கலை பிலாங்காலை இணைத்து, சூசைபுரத்தில் வைத்து ஆகஸ்ட் 26 அன்றும், மஞ்சாலுமூடு, ஆறுகாணி இணைத்து, மஞ் சாலுமூட்டில் வைத்து ஆகஸ்ட் 27 அன்றும், படந்தாலுமூடு, நித்திரவிளை இணைத்து படந்தாலுமூட்டில் வைத்து ஆகஸ்ட் 29 அன்றும் நடைபெற்றது.

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

*சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் ஏனெனில் விண்ணரசு அவர்களுடையதே!*

தக்கலை மறைமாவட்ட குழந்தை ஈசோ இயக்க ஒருங்கிணைப்பாளர்களின் கூட்டமானது 10–08–2019 அன்று கல்லுவிளை மறைக்கல்வி நிலையத்தில் வைத்து நடைபெற்றது.

முதலில் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் இறைவணக்கப் பாடல் பாடினர். இயக்குநர் தந்தை அனைவரையும் வரவேற்றார்.

**ஆயர் அவர்களின் அறிவுரை**

தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் குழந்தைகளின் நலனில் அக்கறை எடுத்து குழந்தைகள் ஆன்மீகத்தில் வளர சில கருத்துகளை பொறுப்பாளர்களுக்கு வழங்கியுள்ளார்.

’சிறு பிள்ளைகள் திருச்சபையின் வருங்காலம். பெற்றோர்கள் பொறுப்பாளர்களின் கையில் குழந்தைகளை ஒப்படைத்திருக்கின்றார்கள். இது நமது தனிப்பட்டப் பணி என்றில்லாமல் திருச்சபையில் நாம் நிறைவேற்றும் இறைவனின் பணி என்னும் மனநிலையுடன் செய்ய வேண்டும். நீங்கள் இது ஒரு ’சிறுபணி’ என்னும் மனநிலை கொள்ளாமல் இருக்க வேண்டும். 5 நிமிடங்களில் குழந்தைகளுடன் எவ்வாறு செலவிடப் போகின்றீர் என்பதைத் திட்டமிட வேண்டும். திட்டமிடுதலுடன், வகுப்புக்கான வடிவமும் முக்கியமானது. புதுமை நிறைந்தவைகளாய் வகுப்புகள் அமைய வேண்டும். இக்குழந்தைகள் சுமார் 7 வருடங்கள் நம்மோடு செலவிடுகிறார்கள். பொதுவான நிகழ்வுகளுக்கு வரும் போது குழந்தைகளுக்கு என்ன கிடைக்கிறது? என்று சிந்தித்து, ஒரு நோக்கத்தோடு செயல்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு விசுவாச வாழ்க்கை கொடுக்க வேண்டியது நம் கடமை. கடவுளால் கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றுகிறோம் என்னும் எண்ணம் இருக்க வேண்டும். கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்டதை குழந்தைகளுக்குப் பகிர்வதைப் பெருமையாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆயர் அவர்கள் கூறினார்கள்.

**மறைமாவட்ட பொறுப்பாளர்களின் கடமைகள்**

1. மறைமாவட்ட நிகழ்வுகளை தவறாமல் அனைத்து பங்குகளுக்கும் அறிவித்தல். அவை கடைபிடிக்கப்பட்டதா என்று உறுதி செய்தல்

2. மறைவட்ட அளவில் நடைபெறும் கருத்தரங்குகளை தலைமையேற்று நடத்துதல்.

3. பங்குகளில் சென்று பார்வையிட்டு கொடுக்கப்பட்ட பாடத்திட்டங்களும், நிகழ்வுகளும் சரியாக நடைபெற்றுள்ளதா என்று ஆராய்ந்து அறிக்கை தயார் செய்தல்.

4. அனைத்து பங்குகளிலும் கூட்டம் நல்ல முறையில் நடைபெறுகிறதா என உறுதி செய்தல்.

5. மறைமாவட்ட கருத்தரங்குகளும், தியானமும் நடைபெறும் போது அதிகமாக குழந்தைகளை கொண்டுவருவது பொறுப்பாளர்களின் கடமை.

6. கலைவிழாவிலும், ஆண்டுவிழாவிலும் அனைத்து பங்குகளிலுமுள்ள குழந்தைகளையும் கலந்து கொள்ள செய்தல்.

7. மறைவட்ட அளவில் தியானம் நடத்துதல்.

**அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில், இயக்குநர்**

---

## மறைமாவட்ட ஆங்கில வழிக்கல்வி தாளாளர்களின் கூட்டம்

ஆகஸ்ட்1, 2019 அன்று ஆங்கிலவழிக் கல்வித் தாளாளர்களின் கூட்டமானது நடைபெற்றது. அனைத்து ஆங்கிலவழிக் கல்விநிறுவனங்களின் மேலாளராக நியமிக்கப்பட்ட அருட்தந்தை தாமஸ்பவத்துப்பறம்பில் அன்றைய தினம் உடனிருந்தார். அவருடையப் பொறுப்புக்கள் குறித்து விளக்கப்பட்டதோடு, அவர் இடையிடையே கல்வி நிறுவனங்களைப் பார்வையிடுவார் எனவும் அறிவிக்கப்பட்டது.கத்தோலிக்கக் கல்விக் கொள்கையை நிறுவனங்களில் கடைப்பிடிக்க வலியுறுத்தப்பட்டது.

## வியானி தின கொண்டாட்டங்கள்

மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள் முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் ஒன்று கூடி வியானி தினம் ஆகஸ்ட் 3, 2019 அனுசரித்தார்கள். பெரும்பாலான குருக்களுக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். கலந்து கொண்டோர் அனைவருக்கும் நன்றிகள். நிகழ்வை ஒருங்கிணைத்த இளங்குருமட தந்தையர்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும் நன்றிகள்.




# இல்வாழ்வு இயக்கம்

**குடும்ப நல வாழ்வு மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது அடிமைகள் மற்றும் மனநோயளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய 3 நாட்களும் மது அடிமைகள் மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. முதல் மற்றும் மூன்றாவது திங்கட்கிழமைகளில் மதியம் 12.30 மணிக்கு மனநல மருத்துவர் வருகை புரிவார். இந்நாளில் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம். இம்மையத்திலிருந்து 800 க்கு மேற்பட்ட மது நோயாளிகளும் மன நோயாளிகளும் சிகிட்சை பெற்று நலமடைந்துள்ளனர்.

**திருமண பயிற்சி வகுப்பு**

திருமண பயிற்சி வகுப்பு இரு மாதத்திற்கு ஒரு முறை மூன்றாவது வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய 3 நாட்கள் நடைபெறும். ஆகஸ்ட் மாதம் 16 முதல் 18 வரை பயிற்சி நடைப்பெற்றது. 26 இளையோர்கள் கலந்துக் கொண்டு பயனடைந்துள்ளனர். இப்பயிற்சியில் தனித்திறன் பெற்ற அருட்தந்தையர்கள் மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்களால் வகுப்பு நடத்தப்படுகின்றன. நிறைவு நாளான ஞாயிறு மதியம் 2 மணிக்கு நடைபெற்ற பெற்றோர்களுக்கான பயிற்சியில் கல்லுவிளையில் வருகை புரியும் மனநல மருத்துவரால் வகுப்பு நடத்தப்பட்டது. பயிற்சி கட்டணம் ரூபாய் 750 ஆகும். இடம் தக்கலை சங்கமம்.

**அருட்தந்தை அஜீஷ்**
**இயக்குநர்**

## சீரோ மலபார் ஆயர் பேரவை

சீரோ மலபார்த் திருச்சபையின் 27 ஆவது ஆயர்ப்பேரவைக் கூட்டம் ஆகஸ்ட் மாதம் 19 ஆம் தேதி தொடங்கி நடைபெற்றது. எர்ணாகுளம்–அங்கமாலி உயர் மறைமாவட்டத்தில் சமீக காலத்தில் நிலவி வரும் முக்கியப் பிரச்சனைகளைக் குறித்த விவாதங்களும் தீர்மானங்களும் இப்பேரவையில் எடுக்கப்பட்டது.




# தக்கலை மத்திய சபை

**பிலாங்காலை வட்டார சபை**

**ஆண்டு விழா**

பிலாங்காலை புனித வின்செண்ட் தே பவுல் சபையின் 25 வது ஆண்டு விழாவானது 11-8-2019 அன்று பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் ஆலய வளாகத்தில் வைத்து தேசிய சபையின் துணைத் தலைவர் சகோ. செளந்தர்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு முன் சகோ. செளந்தர்ராஜ் அவர்களால் சிறப்பான முறையில் தியான உரை நடத்தப்பட்டது. காட்டாத்துறை புனித மிக்கேல் கிளை சபையின் உறுப்பினர் சகோ. மேனக்ஸ் அவர்கள் விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றார்.

சகோ. செளந்தர்ராஜ் அவர்கள் ''வின்செந்திய சபை அன்பு என்ற கட்டளையை மையமாகக்கொண்டு செயல்படுகிறது. கடவுளின் சாயலில் இருக்கிறவர்களுக்கு நாம் உதவி செய்யும் போது தான் நம் இறைவேண்டல்கள் முழுமையடையும். நமக்கு அடுத்து இருப்பவர்களை அன்பு செய்வதன் மூலம் நிலை வாழ்வை பெறுகிறோம். ஏழைகளின் சந்திப்பில் தான் வின்செந்திய பணிகள் நிறைவடைகின்றன'' என்று தமது தியான உரையிலும், ''வின்செந்தியர்கள் திருச்சபையோடு இணைந்து செயல்பட வேண்டும். ஆண்டு விழா கொண்டாட்டத்தில் எல்லோரையும் ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும். மேலும் ஒரு வருட செயல்பாடுகளை ஆராய்ந்து அதன் தொய்வுகளை கண்டறிந்து அவற்றை மாற்றும் புது முயற்சிகளுடன் நன்முறையில் செயல்பட வேண்டும்'' என்று தமது சிறப்புரையிலும் கூறினார்கள்.

செயலர் மற்றும் பொருளாளர் அறிக்கைகள் சமர்ப்பித்தனர். விழாவிற்கு இடையிடையே இளம் வின்செந்தியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆண்டு விழாவில் 53 சகோதர சகோதரிகள் கலந்து கொண்டனர். வட்டார சபை துணைத் தலைவர் சகோ. கிறிஸ்துதாஸ் அவர்களும் கலந்து கொண்டு அனைவருக்கும் நன்றிகள் கூறியதோடு கிளை சபைகள் நன்முறையில் செயல்பட சில அறிவுரைகளை கூறினார்கள். விழாவானது இறுதி ஜெபத்துடன் நிறைவடைந்தது. அனைவருக்கும் தேநீர் விருந்து வழங்கப்பட்டது

**சூசைபுரம் வட்டார சபை ஆண்டு விழா அறிக்கை**

சூசைபுரம் வட்டார சபையின் ஆண்டுவிழா திருகுடும்ப ஆலயம் தக்காளிவிளையில் 25-8-2019 அன்று ஞாயிறு மதியம் 1:30 மணிக்கு அருட்தந்தை சுபின் அவர்களின் நற்கருணை ஆராதனையுடன் துவங்கியது. ஆண்டு விழா பொதுக்கூட்டமானது சூசைபுரம் வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமையில் அருட்தந்தை சுபின் அவர்கள் முன்னிலையில் ஆரம்பமானது. சிறப்பு விருந்தினர் கிறிஸ்து அரசர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ஜான் பால் அவர்களும் மத்திய சபையின் தலைமை பணியாளர் சகோ. ஐய்யாதுரை அவர்களும் இந்திய தேசிய சபையின் துணைத் தலைவர் சகோ. சௌந்தர்ராஜ் அவர்களும் கலந்து கொண்டனர். சகோ. றாபின் ஜோசப் அவர்களின் வரவேற்பைத் தொடர்ந்து, சகோ.ஹேமா அவர்களால் செயலர் அறிக்கையும் சகோ. பிரபு அவர்களால் பொருளாளர் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. அருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தன்னுடைய தலைமை உரையில் 'இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு வின்செந்திய செயல்பாடுகள் சிறப்புற அமைய வேண்டும்' என்று அனைத்து கிளை சபையின் செயல்பாடுகளையும் வாழ்த்திப் பேசினார். 25 ஆண்டுகளாக வின்செந்திய பணிகளை சிறப்புற செய்து வெள்ளிவிழா காணும் சகோ.எட்வின்சன் சகோ.கமலா மற்றும் சகோ.லீலா அவர்களுக்கு வட்டார சபை சார்பாக நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தினர்கள் வெள்ளிவிழா நாயகர்ளையும் வட்டார சபையின் செயல்பாடுகளையும் வாழ்த்திப் பேசினார். விழா மேடையில் நடனம், குழுபாட்டு, வினாடி-வினா மற்றும் புனித அன்னை தெரசாவின் வாழ்க்கை வரலாறு வில்லுப்பாட்டு வாயிலாகவும் அரங்கேறியது. ஆண்டுவிழாவில் சூசைபுரம் வட்டார சபைக்குட்பட்ட 15 கிளைச் சபைகளின் 28 மாணவர்களுக்கு கல்வி உதவியும் 4 பேருக்கு மருத்துவ உதவியும், 45000 அளவில் வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் வழங்கினார். வட்டார சபையின் சார்பாக நிகழ்த்தப்பட்ட வின்செந்திய போட்டிகளுக்கு விழா மேடையில் பரிசுகள் வழங்கப்பட்டன. வட்டார சபை தலைவர் சகோ. சோனிக்ரீகன் அவர்கள் 15 கிளை சபை களையும் ஒருங்கிணைத்து ஆண்டு விழாவை சிறப்புற ஏற்பாடு செய்தார். ஆண்டு விழா பொதுக்கூட்டம் சகோ. ஜஸ்டின் தாஸ் அவர்களின் நன்றியுரை மற்றும் இறுதி ஜெபத்துடன் இனிதே நிறைவுற்றது அனைவருக்கும் உறவின் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

*சகோ. ஷாஜன், செய்தித் தொடர்பாளர்*

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

**நல்வாழ்வு - பென்கிரி**

கண் தானம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் கண் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு கன்னியாகுமாரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் வழியாக சாம்கோ கண் மருத்துவமனை இணைந்து 28-08-2019 அன்று பென்கிரி புனித பெனடிக்ட் ஆலயத்தில் வைத்து இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சி கன்னியாகுமாரி சமூக சேவை சங்க துனை இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**கண் தானம்**

வாழும் காலத்தில், நாம் எத்தனையோ தானம், தர்மம், உதவிகள் செய்கிறோம். அதை எல்லாம் விட, வாழ்ந்து முடித்த பிறகு, பிறருக்கு செய்யும் கண் தானம் தான் மிகச்சிறந்த தானம். கண்தானம் செய்ய, வயது வரம்பு இல்லை. ஒருவர் இறந்த ஆறு மணி நேரத்திற்குள், கண்தானம் அளிக்கவேண்டும். இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர், கண் பார்வை வேண்டி காத்திருகின்றனர். ஒருவர், தனது கண்களை தானமாக கொடுப்பதன் மூலம், இரண்டு பேர் பார்வை பெறுகிறார்கள். இரண்டு குடும்பங்களுக்கு நம்பிக்கையும், சந்தோசமும் கிடைக்கிறது. ஒவ்வொருவரும் கண்தானம் செய்வதை, வாழ்க்கையில் ஒரு கடமையாக ஏற்கவேண்டும்

**பரிசோதனைகள்**

இதில் பென்கிரி புனித பெனடிக்ட் ஆலய பங்குத்தந்தை சுமேஷ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். சாம்கே கண் மருத்துவமனை டாக்டர் தமிழ்செல்வன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

இம்முகாமில் கண் விழித்திரை, கிட்டப்பார்வை, தூரப்பார்வை, கண்புரை மற்றும் கண் சம்பந்தப்பட்ட பரிசோதனைகள் இலவசமாக அளிக்கப்பட்டது. தேவையான நபர்களுக்கு இலவசமாக கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேலும் குறைந்த விலையில் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன இதில்

கள ஒருங்கிணைப்பாளார் திரு. அஜின் மற்றும் களப்பணியாளார் திருமதி. லதிகா உட்பட ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 93 பேர் கலந்து கொண்டனர்.

## Educare

ஏழை மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்கில் KKSSS சார்பில் Educare வகுப்பு நடத்தப்படுகிறது. மஞ்சாலுமூடு மற்றும் ஆறுகாணி மறைவட்ட மாணவர்களுக்கான ஆங்கில பயிற்சி 23-08-2019 அன்று உத்திரம்கோட்டில் வைத்து நடைபெற்றது. அருட்சகோதரர். டிபின் ராஜ் அவர்கள் "காலம்"; எனும் தலைப்பில் ஆங்கில இலக்கணத்தை எளிமையாக பேசவும் பிழையில்லாமல் எழுதவும் மாணவர்களுக்கு விளையாட்டு மற்றும் எழுத்து மூலமாக பயிற்சி வழங்கினார் மதியம் Educare மாணவர்களின் முகாம், விதிமுறைகள் மற்றும் செயல்திட்டம் பற்றி Sr. மெர்லின் றோஸ் கூறினார்கள். இதில் சுமார் 20 மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றார்கள்.

## TB **விழிப்புணர்வு**

காசநோய் பற்றிய விழிப்புணர்வு கன்னியாகுமாரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் 2-08-2019 அன்று ஆசீர் சிறப்பு பள்ளி சேனங்கோட்டில் வைத்து நடைபெற்றது. அரசு மருத்துவமனை காசநோய் விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர் திருமதி நாகேஸ்வரி அவர்கள் விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கினார்கள். அவர் தமது உரையில், "குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து வயதினரையும் தாக்கும் நோய்களில் காசநோயும் ஒன்று. மைக்கோபாக்டீரியம் ட்யூபர்குளோசிஸ் நுண்கிருமியால் வரக்கூடிய இந்த நோய், பரம்பரை நோயல்ல. தலைமுடி நகம் பல் தவிர உடம்பின் அனைத்து பாகங்களையும் தாக்கக்கூடியது. இந்த நோய், சர்க்கரைநோய் மற்றும் ஹெச்.ஐ.வி உள்ளவர்களுக்கு எளிதில் தொற்றிக்கொள்ளும் வாய்ப்புள்ளது. இந்த நோயைச் சரியான சிகிச்சைகள் மூலம் முற்றிலுமாகக் குணப்படுத்த முடியும். இந்தியாவைப் பொறுத்தவரை கண்டுபிடிக்கப்படாத டி.பி நோயாளிகளின் எண்ணிக்கையே அதிகம். சிகிச்சையை அரையும் குறையாக நிறுத்தியவர்களுக்கு எம்.டி.ஆர் டி.பி பாக்டீரியா உருவாகி, தீராத நோயை ஏற்படுத்தி, அதை மேலும்

பரவச்செய்கிறது. டி.பி நோய்த் தாக்குதல் நம் உடலில் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருக்கும்போதோ அல்லது தொடர்ந்து டி.பி கிருமிகளை அதிகமாக எதிர்கொள்ளும்போதோ ஏற்படும். CBNAAT டெஸ்ட் மூலம், இரண்டு மணி நேரத்தில் அந்தக் கிருமியின் மருந்து எதிர்ப்புத் தன்மையை அறிந்துகொள்ளலாம். மது அருந்துவதை நிறுத்த வேண்டும் எல்லா காசநோய் மருந்துகளும் பக்கவிளைவுகளை ஏற்படுத்துபவையே. குறிப்பாக ஈரல் பாதிப்பை ஏற்படுத்தும். அதிலும் இரண்டாம் கட்ட மருந்துகள் அதிகபட்சமான பக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. எனவே, இந்த நோய் வந்தால் முழுமையான சிகிச்சைபெற வேண்டியது அவசியம். மது, ஈரலை பாதிக்கக்கூடியது என்பதால் டி.பி நோய் பாதித்தவர்கள் உடனடியாக மது அருந்துவதை நிறுத்த வேண்டும். சர்க்கரை நோயாளிகளுக்கு டி.பி வந்தால் மருத்துவரின் ஆலோசனையுடன் இன்சுலின் ஊசியைப் பயன்படுத்த வேண்டியது அவசியம்" என்றார். இதில் FCC அருட்சகோதரி விமலா அருட்சகோதரி லீமா களப்பணியாளர்கள் திருமதி. சாந்தி மற்றும் எஸ்தர் உட்பட ஆண்கள், பெண்கள் குழந்தைகள் என 63 பேர் கலந்து கொண்டனர்

---

## மதுரையில் புனித அல்போன்சா சமூகக் கூடம் மற்றும் தையல் தொழிலகத்திற்கான அடிக்கல் மந்திரிப்பு

மதுரையில் திருத்தொண்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்தும், சொந்தமென இடம் இதுவரை இல்லாதிருந்தது. இப்போது திரு ஜோமிச்சன் அவர்கள் அளித்த நிலத்தில், ஒரு சமூகக் கூடமும், தையலகமும் தொடங்குவதற்கான அடிக்கல், 18 ஆகஸ்ட், 2019 அன்று மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்களால் மந்திரிக்கப்பட்டது

# Educational Ministry



# கல்விப் பணி

**கார்மல் மாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி**

**கோவளம் கன்னியாகுமாரி**

03-08-2019 அன்று கார்மல் குடும்ப கூடுகை மற்றும் கலந்தாய்வு மவுண்ட் கார்மல் பள்ளி முழுக்கோட்டில் நடைபெற்றது. எங்கள் பள்ளி தலைமையாசியர், அருட்சகோதரிகள் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

06-08-2019 மற்றும் 07-08-2019 அன்று “கார்மல் கில்ட்ரா 2019’ மாபெரும் திறனாய்வு போட்டி நடைபெற்றது. மாணவார்களின் திறமைகளை வெளிகொணரும் விதமாக பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

06-08-2019 அன்று பள்ளி மாணவர் பேரவைத் தேர்தல் நடைபெற்றது.

14-08-2019 அன்று மாணவர் பேரவை உறுப்பினர்களின் பதவியேற்பு விழா நடைபெற்றது. அன்று சுதந்திர தின விழாவும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளி மாணவர்களின் அணி வகுப்புகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் தேசிய பாடல் போட்டியும் நடைபெற்றது. ஆசிரியர் சுரேந்திர பெஸ்னட் அவர்கள் தேசிய கொடியேற்றி விழாவினை சிறப்புச் செய்தார்கள்

20-08-2019 அன்று அறிவியல் மன்ற தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது

21-08-2019 அன்று 1 முதல் 9 வரை உள்ள ஒவ்வொரு வகுப்பிலும் இலக்கிய மன்ற கூடுகை நடைபெற்றது.

29-08-2019 அன்று முதியோர் தினம் வெகுச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாணவர்களின் தாத்தாக்கள் மற்றும் பாட்டிகள் கலந்து கொண்டனர். தாத்தாப் பாட்டிகளை மகிழ்விக்கும் விதமாக பல்வேறு கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்பட்டது

30-08-2019 அன்று Interact Club 2019-20 தொடக்க விழா நடைபெற்றது. அதில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு கன்னியாகுமரி ரோட்டரி கிளப் தலைவர் Rotarian A.S. Vivekanandan அவர்களால் பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. கன்னியாகுமாரி ரோட்டரி கிளப் உறுப்பினர்கள் எம் பள்ளி முதல்வர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# அருட்சகோதரர்களிடமிருந்து...




## ஆயரின் சந்திப்பு

அனைத்து அருட்சகோதரர்களுக்கும் நலம் ஜூலை மாதம் 13ஆம் தேதி மேதகு ஆயர் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் தலசேரியில் நல்லாயன் மேஜர் செமினரிக்கு வருகை தந்தார். ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதி மங்கலபுழா புனித ஜோசப் மேஜர் செமினரிக்கும் வருகை தந்தார். அங்குள்ள நமது சகோதரர்களை சந்தித்தார்.

## புனித வியானி தினம்

இளம் குருமடத்தில் ஆகஸ்ட் மாதம் மூன்றாம் தேதி புனித வியானி திருநாள் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்தக் கொண்டாட்டத்தில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களும் அனைத்து அருட்தந்தையர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பல்வகை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மதிய உணவின் முடிவில் அருட்தந்தையர்களுக்கும் அருட்சகோதரர்களுக்கும் இடை–யிலான கைப்பந்து போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்ற அனைத்து அருட்தந்தையர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். அனைத்து மேஜர் செமினரிகளிலும் புனித வியான்னியினின் திருநாள் மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

அனைத்து அருட்சகோதரர்களும் பல்வேறு குரு இல்லங்களுக்குச் சென்று அங்குள்ள குருக்களை சந்தித்து குருக்களின் பாதுகாவலரான புனித வியான்னி அவர்களின் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

## அருட்தந்தையர்கள் சந்திப்பு

ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் அருட்தந்தையர் தங்கச்சன், பிரிண்டோ, வினோத் ஆகியோர் கோட்டயம் செமினரிக்கு வந்து இங்குள்ள சகோதரர்களை சந்தித்தனர். ஆகஸ்ட் மாதம் 25 ஆம் தேதி அருட்டபணி. அஜின் ஜோஸ் மங்கலபுழா புனித ஜோசப் மேஜர் செமினாரிக்கு வந்து இங்குள்ள சகோதரர்களை சந்தித்தார். இந்த நான்கு தந்தையர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.

## தேர்வு

அருட்சகோதரர்கள் முதல் பருவ தேர்வுக்கு தாயார் செய்கின்றார்கள்

## வாழ்த்து

ஆகஸ்ட் மாதம் 14ஆம் தேதி இறையியல் படிப்பதற்காக உரோமைக்கு சென்ற அருட்சகோதரர் ஜோர்ஜ் கண்டத்தில் அவர்களுக்கு அனைத்து அருள்சகோதரர்கள் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்கள்.

தலைவர்
சகோ ஜோஸ்

## மறைவட்ட செய்திகள்




# நித்திரவிளை மறைவட்டம்

**புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை**

ஜார்ஜியார் திருத்தலத்தில் 11–8–2019 அன்று காலை மறைக்கல்வி வகுப்பிற்குப் பின் புனித தோமையார் தினம், புனித அல்போன்சா தினம், புனித ஜான் மரிய வியான்னி தினம், புனித அன்னை மரியாவின் விண்ணேற்பு தினம், பாரத நாட்டின் 73 ஆவது சுதந்திர தினம், ஆக ஐம்பெரும் விழாக்கள் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை ஜோசப் மங்கலாமடத்தில் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அருட்சகோதரி நிர்மலின் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. அருட்சகோதரி ஜெனிபர் அவர்கள் தோமையாரின் விசுவாச வாழ்வு, அல்போன்சாவின் சகிப்புத்தன்மை, மரிய வியானி அவர்களின் ஜெப வாழ்வு, அன்னை மரியாவின் எளிமை இவை அனைத்தையும் மையப்படுத்தி வாழ்த்துரை வழங்கினார்கள். தந்தை அவர்கள் தலைமையுரை ஆற்றும் போது ஒரு கதை மூலம் நம் முன்னோர்களின் விசுவாசத்தை எடுத்துக் கூறி, அவற்றுக்கெல்லாம் முன்னின்று நம்மை வழி நடத்துவது நம் அன்னையின் பரிந்துரையே என்றும் அன்னை வழி நாம் ஏராளம் அருள் பெற கேட்டுக் கொண்டார்கள். 25–8–2019 அன்று காலை திருப்பலிக்குப் பின் அருள்சகோதரி ஜெய்ஸ் தேரேஸ் அவர்களுக்கு பிரிவு உபசார விழா நடந்தது. சுமார் 2 ஆண்டுகள் அவர்கள் மறைக்கல்வி மிஷன்லீக், குழந்தை ஈசோ இயக்கம் இவற்றிற்கு ஆற்றிய இறைப்பணியை பாராட்டி மறைக்கல்வி சார்பாகவும் பங்கு சார்பாகவும் ஒரு சிறு பரிசு வழங்கப்பட்டது.

மேலும் மறைவட்டத்திற்கு உட்பட்ட எல்லா

பங்குகளிலும் அன்னை மரியாவின் விண்ணேற்பு விழாவும் சுதந்திர விழாவும் சிறப்பிக்கப்பட்டது. திருப்பலிக்குப் பின் தேசிய கொடியேற்றி மகிழ்ந்தனர். மறைக்கல்வி மாணவர்கள் சார்பாக இவ்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**ஜெய மாதா ஆலயம் நித்திரவிளை**

அன்னை மரியாவின் விண்ணேற்பு திருவிழாவும் பங்கின் 59வது ஆண்டு விழாவும் ஆகஸ்ட் மாதம் எட்டாம் தேதி முதல் 15ஆம் தேதி முடிய மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதற்கு ஆயத்தமாக ஜூலை 31 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 7ஆம் தேதி வரை நித்திரவிளை பாத்திமா மாதா குருசடியில் ஜெபமாலை மற்றும் நவநாள் ஜெபம் நடைபெற்றது.

7-8-2019 அன்று இறந்தவர்களுக்கான திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

8-8-2019 அன்று மாலை திருக்கொடியை பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் ஏற்றினார்கள்.

இரண்டு மூன்று மற்றும் நான்காம் திருவிழா நாட்களில் நற்செய்தி பெருவிழா சகோ. ஆனந்த் இயேசு நம் மீட்பர் குழு சென்னை அவர்களால் வழிநடத்தப்பட்டது.

நான்காம் திருவிழா அன்று காலை பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துபறம்பில் குருகுலமுதல்வர் அவர்கள் தலைமையில் திருப்பலியும் திருமுழுக்கு உறுதிப்பூசுதல் முதல் திருவிருந்து பெறுதல் திரு நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றது.

ஐந்தாம் நாள் பேரருட்தந்தை சனல் பந்திச்சிறக்கல் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலியும் பேரருட்தந்தை பிறின்ஸ் மாலியில் அவர்கள் தலைமையில் ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடந்தது

ஆறாம் நாள் திருப்பலி மற்றும் ஆண்டு விழா பொதுக்கூட்டமும் பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

எட்டாம் நாள் அன்னையின் விண்ணேற்பு பெருவிழா மற்றும் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. காலை 9.30 மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலி அர்ப்பிக்கப்பட்டது. அருட்தந்தை அபிலாஷ் சேவியர் மற்றும் அருட்தந்தை ஜெபனேஷ் ஆகியோரும்

உடன் இருந்து சிறப்பித்தனர். திருப்பலிக்கு பின் மாதா தேர்ப்பவனி மற்றும் அன்பின் விருந்து நடைபெற்றது.

மாலை ஆறு 6.30 மணிக்கு ஜெபமாலையை தொடர்ந்து திருக்கொடி இறக்கப்பட்டது.

## சூசைப்புரம் மறைவட்டம்

**புனித தேவமாதா ஆலயம் கிள்ளியூர்**

இந்திய சுதந்திர தின விழா, கன்னிமரியாவின் விண்ணேற்பு திருநாள், தேவமாத குருசடி ஆண்டுவிழா, கோயில் புதுப்பித்தல் விழா, உறவிய ஆண்டுவிழா ஆகிய ஐம்பெரும் விழாக்கள் கொண்டாடப்பட்டது. 15-07-2019 அன்று மாலை 4 மணிக்கு உறவியங்களின் இயக்குநர் தந்தை ஜோஸ் வயலில் அவர்களால் மிகவும் ஆடம்பரமாக திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்தில் அருட்தந்தை ஜோஸ் வயலில் தலைவராகவும், காரோடு பங்குதந்தை அஜிஷ் அட்டியில் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார். இதில் அனைத்து உறவிய மக்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியாக அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

**கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்**

ஆகஸ்ட் 15-07-2019 அன்று, கன்னிமரியாவின் விண்ணேற்பு திருநாள் முன்னிட்டு ஆடம்பரமாக திருப்பலியும், ஆலயம் முதல் சேவிளை வரை பவனியும் நடைபெற்றது. இறுதியாக அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

1 மாதமாக மரியாவின் சேனை சார்பில் குருசடியில் ஜெபமாலை நடத்தப்பட்டது.

3-வது ஞா-யிற்றுக்கிழமை கல்லறைத் தோட்டத்தில் ஜெபமாலையும், நவநாளும் நடைபெற்றது.

# சீரோ மலபார் ஆயர் பேரவை மற்றும் அருட்பணிப் பேரவை கூட்டம்

நமது திருச்சபையின் ஆயர் பேரவை வருடந்தோறும் இருமுறை கூடி திருச்சபையின் செயல்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டமிடலை சிறப்புற செயல்படுத்தி வருகிறது. 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் கூட்டம் 10.08.2019 முதல் 30.08.2019 வரை சிறப்புற நடைபெற்றது. இதில் உலகெங்கும் உள்ள திருச்சபையின் ஆயர்கள் 55 பேர் கலந்து கொண்டனர். இவ் ஆயர் பேரவையின் வரலாற்றுச்சிறப்பு மிக்க நிகழ்வாக 26.08.2019 திங்கட்கிழமையன்று ஆயர் பேரவையோடு மறைமாவட்ட அருட்பணிப் பேரவைச் செயலர்களும் இணைந்த கூட்டம் முதல் முறையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் நமது மறைமாவட்டத்தன் சார்பில் இணைச் செயலர் திரு. ஜான் அவர்கள் கலந்து கொண்டார்கள். சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராய மையமாகிய காக்கனாடு புனித தோமா மலையில் உயர் பேராயர் கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி தலைமையில் முற்பகல் 10.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற்றது. இக்கூடுகையில் ஆயர்கள் முன்னிலையில் மறைமாவட்ட அருட்பணிப் பேரவை மற்றும் செயல்பாடுகள் சமர்ப்பித்தல், பேரவை செயலர்கள் கலந்தாலோசித்து புது தீர்மானங்கள் நிறைவேற்றல், தீர்மானங்களின் அடிப்படையில் செயல்கள் மற்றும் ஆயர்கள் கலந்துரையாடல் என மூன்று அமர்வுகள் நடைபெற்றன. முதல் அமர்வின் போது நமது மறைமாவட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட 5 நிமிட நேரத்தில் நமது மறைமாவட்ட அருட்பணி பேரவை தற்போதைய செயல்பாடுகள், நமது மறைமாவட்டத்தின் திருத்தொண்டு பணிகள் பற்றி திரு. ஜான் அவர்கள் எடுத்துரைத்தார்கள். இவ்வேளையில் நம் மறைமாவட்ட திருத்தொண்டு பணிக்கு ஜெபத்தாலும் நிதியாலும் உதவுகின்ற சங்ஙானாசேரி, பாலா, இரிஞ்ஞாலகுடா, காஞ் ஞிரப்பள்ளி மறைமாவட்டங்களுக்கு நன்றியும், 6–ஆம் அருட்பணிப் பேரவைக்கான தேர்தல் நடைமுறையையும் இணைச்செயலர் எடுத்துரைத்தார். இரண்டாம் அமர்வில் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் இது போன்ற நடைமுறைகள் செயல்படுத்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மூன்றாம் அமர்வில் இரண்டாம் அமர்வின் தீர்மானங்கள் பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது. பின்னர் அனைத்து தீர்மானங்களுக்கும் செயல்வடிவம் கொடுக்க ஆவன செய்வதாக உயர் பேராயர் அவர்கள் உறுதியாளித்தார். இறுதியில் உயர் பேராயர் அவர்களின் இறுதியாசீரோடு கூடுகை பிற்பகல் 4 மணிக்கு முடிவுற்றது.

**திரு. ஜான்**

**பேரவை இணைச் செயலர்**

# EPARCHY OF THUCKALAY

## PERSONAL DETAILS OF JUBILARIANS



Jubilaran : SR. MARIA
Congregation : FCC
Parents : Joseph & Rosamma
First Profession : 02-05-1970
Jubilee : Golden Jubilee
Community : Azhakiyamandapam



Name : SR.CLARELET
Congregation : CMC
Parents : V.G. Thomar & R.C. Aleyemma
First Profession : 05-05-1970
Jubilee : Golden Jubilee
Community : Manakudy



Jubilaran : SR. MARIA MADATHIL
Congregation : SABS
her Parents : Joseph & Thhresiamma
Profession : 03-07-1970
Jubilee : Golden Jubilee
Community : Kulasekharam



Jubilaran : SR. TESSY
Congregation : SDS
Parents : Majhai & Katerina
First Profession : 08-09-1969
Jubilee : Golden Jubilee
Community : Padanthalumoodu



Jubilaran : SR. ANNIE
Congregation : SABS
Parents : Ouseph & Annamma
First Profession : 29-04-1970
Jubilee : Golden Jubilee
Community : Bishop,s House



Jubilaran : SR. ELIZABATH
Congregation : SABS
Parents : K.J Thomas & Marama Thomas
First Profession : 29-04-1970
Jubilee : Golden Jubilee
Community : Mankarai



Jubilaran : SR CELIN
Congregation : SABS
Parents : V V Devasia
First Profession : 03-07-1970
Jubilee : Golden Jubilee
Community : Noviciate House Mamood



Jubilaran : SR JOHNCY
Congregation : FCC
Parents : Joseph & Aleyamma
First Profession : 02-11-1994
Jubilee : Silver Jubilee
Community : Thadikarankonam



Jubilaran : SR. LITTY MARIA
Congregation : SABS
Parents : Joseph Chandy & Rosamma
First Profession : 18-02-1995
Jubilee : Silver Jubilee
Community : Mankarai



Jubilaran : SR SIMI
Congregation : SJSM
Parents : Varghese & Rosy
First Profession : 04-12-1994
Jubilee : Silver Jubilee
Community : Anayadi



Name : SR LINCITTA
Congregation : CMC
Parents : Varkey Antony & Rosamma
First Profession : 3-05-1995
Jubilee : Silver Jubilee
Community : Netta



Jubilaran : SR SOONA ROSE
Congregation : CMC
Parents : Thomas Antony & Aleykully
First Profession : 3-05-1995
Jubilee : Silver Jubilee
Community : Pilankarai



Name : SR ROSELET MATHEW
Congregation : CMC
Parents : P.S Mathew & Thresiamma
First Profession : 03-05-1995
Jubilee : Silver Jubilee
Community : Thuckalay



Jubilaran : SR LEEMA ROSE
Congregation : FCC
Parents : Joseph & Clare
First Profession : 02-11-1994
Jubilee : Silver Jubilee
Community : Chenamcode

## செய்தித் துளிகள்

அக்டோபர் 13, 2019 அன்று வத்திக்கானில் நடைபெற இருக்கும் புனிதர்கள் பட்டமளிப்பு விழாவின் போது, திருக்குடும்ப அருட்சகோதரி மரியம் தெரேசியா அவர்கள் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவார். புனிதராக அறிவிக்கப்பட்டதன் நன்றியறிதல் திருப்பலி நவம்பர் 23, 2019 அன்று படந்தாலுமூட்டில் வைத்து நடைபெறும்.

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தில் துணை இயக்குநராக பணியாற்றி வரும் அருட்தந்தை அபி பூவத்துமூட்டில் அவர்கள் மறைமாவட்ட **Health Unit (DHU)** செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# செங்கோட்டை செய்திகள்

**அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டம்:**

15.8.2019 அன்று செங்கோட்டை மறைத்தள பணியாளர்களின் கூடுகையானது எப்.சி.சி கன்னியர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. மாலை 6.30 மணியளவில் ஆராதனையுடன் ஆரம்பமானது.அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்கள் ஆராதனையை பொறுப்பேற்று நடத்தினார்.தொடர்ந்து கூட்டமானது ஆரம்பமானது. மாதாந்திர தியானம் மற்றும் பக்த இயக்கங்களின் செயல்பாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. இறுதி ஆசீருக்குப் பின் அன்பின் விருந்துடன் கூட்டமானது நிறைவுற்றது.

## BIRTHDAYS OF REV FATHERS

| BIRTH DAYS - SEPTEMBER | |
|---|---|
| Fr. Jose Muttathupadom | 02 |
| Fr. Shoji Puthenpurackal | 23 |
| Fr. Mathew Kuzhinjalil | 28 |

## FEASTDAYS OF REV FATHERS

| FEAST DAYS - SEPTEMBER | |
|---|---|
| Fr.Saji Elambasserril SDB | 21 |
| Fr. Lijo Thekkel | 21 |
| Fr. Mathew Thekkekutt | 21 |
| Fr. Matheus Robert | 21 |
| Fr. Mathew Mulangasserril MST | 21 |
| Fr. Santhosh Kayyalaparampil CMI | 21 |
| Fr. Mathew Kuzhinjalil | 21 |

# BISHOP'S ENGAGEMENTS Sept. 2019

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sun | 10.00 am | Killiyoor: Feast Day Holy Qurbana |
| 2 | Mon | 07.00 am | Sangamam: Youth Retreat Holy Qurbana |
| 3 | Tue | 08.30 am | Curia meeting |
| | | 12.00 pm | Finance council Meeting |
| | | 02.00 pm | Meeting with Priests in the missions |
| 4 | Wed | 09.00 am | Bishop's House: Meeting with departments directors |
| | | 04.00 pm | Meeting with Hymn book committee |
| 5 | Thu | 10.00 am | Changai: Marriage Reception>>Idukki |
| 6 | Fri | 11.00 am | Rajakumari, Idukki: Holy Qurbana>>Thuckalay |
| 7 | Sat | 06.00 pm | Kallikulam: Holy Qurban |
| 8 | Sun | 10.00 pm | Bishop's House: Feast Day Holy Qurbana |
| | | 05.30 pm | Kaliyal: Feast Day Holy Qurbana |
| 9 | Mon | 10.00 am | Pilankalai: Meeting with Forane Vicars |
| 10 | Tue | 03.00 pm | Bishop's House: Meeting with TCYM Leaders |
| 11 | Wed | 09.30 am | Onam |
| 12 | Thu | 10.00 am | Thiruthuvapuram: Marriage Holy Qurbana |
| 13 | Fri | 09.30 am | Sangamam: Eparchial Priests' Conference |
| 14 | Sat | 07.00 am | Mukkoottukal: Prayer day with minor seminarians |

| | | | |
|---|---|---|---|
| 15 | Sun | 10.00 am | Chengavilai: Holy Qurbana |
| | | 06.00 pm | Kozhencherry: Feast day Holy Qurbana |
| 16 | Mon | | Bishop’s House: Episcopal Ordination Anniversary |
| | | 05.00 pm | Vayalinkarai: Blessing of Mother Theresa Hospice |
| 17 | Tue | | Bishop's House: Translation of Propria |
| 18 | Wed | 10.00 am | Bishop’s House: Meeting with SD Provincial<br>Translation of Liturgy |
| 19 | Thu | 11.00 am | Kottayam: Medical center Golden Jubilee celebration |
| | | | Sengottai: Mission meeting |
| 20 | Fri | 11.00 am | Thenkasi: Feast Day Holy Qurbana |
| 21 | Sat | | Bishop's House |
| 22 | Sun | 10.00 am | Kattathurai: Feast Day Holy Qurbana |
| 23 | Mon | 09.00 am | Trichy: Health Commission Meeting |
| 24 | Tue | 05.30 pm | Annikarai: Feast Day Holy Qurbana |
| 25 Sep.-20 Oct | | | Rome: Ad Limina Visit |

Fr. Sajan Nettaponghu, Bishop’s Secretary








11 AUGUST 2019
MEDICAL CAMP
PUDUR







12 AUGUST 2019
BLESSING OF NEW MISSION
STATION, CUMBAM







15 AUGUST 2019
REMEMBERANCE HOLY
QURBANA, MALAICODE

# GOLDEN JUBILEE OF RELIGIOUS PROFESSION


SR. MARIA
FCC


SR. ELIZABETH
SABS


SR. MARIA
SABS


SR. CLARELET
CMC


SR. CELIN
SABS


SR. TESSY
SDS


SR. ANNIE
SABS

# SILVER JUBILEE OF PRIESTLY ORDINATION & RELIGIOUS PROFESSION


FR. JOSHY
CMI


FR. PETER
(CHRY)


FR. THOMAS
(PALA)


SR. JOHNCY
FCC


SR. LINCITTA
CMC


SR. SIMI
SJSM


SR. ROSELET
CMC


SR. LITTY
SABS


SR. SOONA
CMC


SR. LEEMA
FCC

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570